திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவரவர்களே, பாலிடால் போன்ற இரசாயன உரங்களில் (குறுக்கீடு) பூச்சிக் கொல்லி மருந்துகளில் மண்ணெண்ணெயைக் கலந்து வியாபாரிகள் விற்கிறார்கள். எனவே, விவசாய வேளாண் சங்கத்தின் மூலமாகப் பூச்சிக்கொல்லி மருந்துகளை வழங்குவதற்கு ஆவன செய்யப்படுமா? கலப்படம் செய்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நடவடிக்கை எடுக்கப்படக் கூடிய ஒன்று. ஆனால் இந்தத் துறையே அந்த வியாபாரத்தைச் செய்ய இயலாது. இதற்கு வேறு பணிகள் இருக்கின்றன.

6. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

''1972-73-ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் முன்னறிக்கை மீதான பொதுக் கணக்குக் குழு (1977—78) அளித்த இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் பத்தாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை''

அளிக்கிறேன்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

அ. மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, ''1981-ஆம் ஆண்டு மதுரை-காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை''ப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.